


ST. ANNE'S GENERALATE

Madavaram | Chennai - 600 060
Tamilnadu | India

NOVEMBER 2023

# AGNL

Volume : 03 Issue : 10


***Dear Sisters,***

***Greetings and warm wishes from Sr.Clara Vasanthi SSAM.***

I am happy to share with you the important happening in our Congregation for the past few months. We can't but say "We have found favour in the eyes of God" (Gen 6:8).

- Lord you are the potter and we are the clay in your hands' (Ps 127: 1). A bird's eye view of the initial formation at Yercaud.
- Training of the formees in Pre-Novitiate and Novitiate.
- Unless the Lord builds the house, the builders labour in vain' (Ps 127:1). A new convent at Bermersbach, Germany.
- New hope for health ministry - another Doctor sister for the health ministry.

Let us read the above in this newsletter and thank and praise God for we have found favour in the eyes of God.

We are well aware of the war between Israel and Palestine and the unrest situation across the globe. Let us take time to read the newspaper and become aware of the impending hate feelings and the resultant revenge attitude. Let us along with the Holy Father pray for peace around the world. Let us also listen to the inward unrest in our hearts and try to rest in the Lord alone through deep prayer and trust in the Divine Providence.

With Lots of Love and prayer

Sr. Clara Vasanthi SSAM.

Sr. Clara Vasanthi SSAM

## 01. Vocation Promotion

Dear Sisters, I wholeheartedly appreciate all our sisters who expressed their belongingness to the Congregation through their prayerful support and active involvement in recruiting vocation to our Congregation. I thank the Vocation Promoters, Provincials and Regional Superiors for their personal interest and perseverance in this mission. We have all together 17 candidates in Yercaud. I earnestly request all our sisters to be involved in the vocation promotion ministry, taking it as our primary concern and preference over other works. Here are the messages from our three formation houses.

## 02. Aspirantate - Yercaud

"A unique vocation to a less travelled road"

The world has grown at a rapid level in technology to some unimaginable heights where the thought of being and living a simple religious life has become a rare sight for the present generation. Amidst this swift Space Age era, our Congregation stands as an evident expression of God's grace and mercy as we are blessed with 17 vibrant, young, energetic and zealous aspirants for the years 2023 - 2024.



These young girls made their arrival at the formation house at Yercaud towards the middle of April and the beginning of May. These months were a time to learn with fun. The aspirants were very excited and thrilled to learn Spoken English, action songs, folk art and other interesting activities like enactment, dance and games. The academic year began with the orientation session held on 2 - 3, June by Salesian fathers from Retreat House in Yercaud. The candidates remained more open and positive for the inputs.

### A step to get closer to God

The ardent zeal and quest for God have sparked a passion for prayer in aspirants. They are involved fervently in all prayer services and faith sharing. They have regular morning meditations, prayers, adorations and Holy Eucharist. They are enabled to partake meaningfully in 12 hours of Adoration, regular recollections, confessions, special rosaries, reading the scriptures and examination of conscience. These spiritual practices enable them to discern their vocation.

### A humble march towards a disciplined formation

The aspirants are facilitated to understand the need to deepen their human values. They are encouraged to maintain silence, follow the duties of the formation house with discipline, contribute to the common work and grow in gratefulness. They are given opportunities to visit old age homes and BCCs periodically to grow in social and spiritual upliftment.

### A steady leap to know and learn more

In order to facilitate a solid intellectual formation, English grammar classes, spoken English, phonetics, introduction to the basic Scriptures, catechism, life skills to discern their vocation and communication skills classes are organized. Apart from these classes, various activities of arts and crafts, vase arrangement and cultural and pastoral training are held to aid their growth in self-confidence and maturity.

We thank God the Almighty, our Mother Congregation, our Superior General and all the sisters whose support and guidance always take us forward. We owe our prayers to you all and request your fervent prayers for our onward journey.
**Srs.Shilpa and Leodith, Yercaud**

## 03. Pre-Novitiate - Thambuchettypalaya

"The road to God is paved with the stones of religious formation, each step a lesson, each challenge a blessing"



The stage of Pre-Novitiate formation holds paramount significance for individuals who aspire to lead a life dedicated to the religious way. It functions as a preparatory phase, nurturing the seeds of religious vocation and laying a sturdy foundation for the forthcoming Novitiate period. This year, on the 11th of May, six Pre-Novices stepped forward, to journey deeper into their religious calling within our Congregation. The formation, at its' core, is a divine endeavour in which we humbly assume the role of instruments, harmonizing our 'Yes' with God's grand design. We hold a firm belief that the past six months of our formation program have been a pure manifestation of God's grace and boundless mercy.

Under the gentle guidance of God and the invaluable assistance of Sr.Fatima Rani, we have embarked on a dedicated journey aimed at the development and growth of our Pre-Novices. Thus, with profound gratitude, we chronicle several significant events and big lessons that have unfolded during these transformative six months.

In the warm embrace of May, the newcomers arrived at the Pre-Novitiate, commencing a new academic year. Their journey commenced with an enlightening orientation session.

The formation programs place a significant emphasis on prayer, an introduction to psalms, meditation, recollection, Holy Hour, learning to recite the divine office and other spiritual exercises fostering a profound sense of spirituality and devotion. Foundational Scriptural and psychological studies are an integral part of the pre-novitiate formation, equipping Pre-Novices with a comprehensive understanding of their faith and themselves. They are guided in their vocational discernment through spiritual direction, personal introspection and mentorship from seasoned individuals. Additionally, sessions covering spoken English, basic communication skills, and personal health and hygiene are conducted. In the light of preparing them for future pastoral ministry, the Pre-Novices are sent to house visiting, where they pray together and instil the value of praying together.

We extend our heartfelt gratitude to the benevolence and unwavering support of God during the rigorous periods of training and formation. We wish to take this opportunity to express my sincere appreciation to our esteemed Superior General Mother Clara Vasanthi for her unwavering support, guidance, love, encouragement, timely directives and profound interest in the growth of our Pre-Novices. We extend my deep gratitude to the General Councilors, Provincials and Regional Superiors for their contributions are invaluable to the ministry of formation. We humbly request your continued prayers for us.
**Srs. Susi Bernard and Fatima Rani, Thambuchettypalaya**

## 04. Novitiate - Madavaram



"Each time that God calls someone it is an invitation of His love. God calls to life, He calls to faith, and He calls to a particular state of life" - Pope Francis

Novitiate is a time of intense formation with the sole purpose of preparing for a vowed life. Every experience, exposure and enlightenment that we receive here helps us to know our vocation and purpose clearly.

We like to share with you two important programmes. The first one is 'Formation of Conscience' by Fr. Selva Kumar SDB from Yercaud. Conscience is the inner heart of God. It will allow us to make the right decisions. This will make us to be truthful to ourselves. During this class, we were asked to do an examination of Conscience to know our strengths and limitations. He animated us to live in freedom because it will teach us to do what we ought to do as a novice.

The second one is 'Socio, political and cultural analysis as the perspective of society and the Church' by Fr. Sebastian SDB from Chennai. This class enabled us to have a better understanding of the structure of the society and the duties of a religious in the society. We understood that more than knowing the Bible, we should become the Bible and its value through our life and mission. We also understood the following:

- For religious, professional fulfilment and spiritual frustration should be an enemy.
- There is no 'I am done', but 'I am ready for 24x7'.
- I am called to create an equal, just and fraternal society and called not to be a chair religious but field religious.

We are much inspired and filled by the missionary spirit through these classes.

### Grow Green

From the day one, under the guidance and inspiration of our Mother General along with Generalate community and the Generalate co-workers, we collected the use and throw water bottles, painted and created a new nursery garden in our campus. The garden contained medicinal plants, crotons and fruit trees.

### Distribution of saplings

This year we distributed more than 500 plants for our parishioners on the feast of our Patroness St. Anne, our Co-Patron St. Francis of Assisi and for the grandparent's day on 23rd of July.

### Spreading Marian devotion

Holy articles play a vital role in the life of a religious. We, the novices, learnt to make Rosary. Making the Rosary and praying with what we have made generated a great thirst to make and pray the Rosary every day. We immersed ourselves in making Rosaries. In the first week of October, we made a resolution to meditate and pray all the mysteries. We had a Rosary competition and three of our novices received prizes. During the month of October, novices who were accompanied by the sisters went to different families to pray the Rosary. On the 31st of October, we were also given a chance to enact and pray the Rosary in the parish.

Apart from the above program, we receive a lot of opportunities to tap our inner resources. We are trained to hard work and love nature.

We are indeed blessed to be in the Generalate campus, experiencing the motherly love of our Superior General and meeting many sisters of our Congregation in the campus through which we also cultivate love for our Congregation and reverence for our sisters.

We request dear sisters to continue to pray for us that we may grow in the footsteps of our Foundress Servant of God Mother Thatipathri Gnanamma and be faithful disciples of our Lord Jesus Christ.

**Srs. Brida, Amala & Arokia Shilpa, Madavaram**

## 05. New feather in German mission

"We know that all things work together for good for those who love God who are called according to his purpose" (Rom 8:28)



On 10th September 2023, we were welcomed with immense joy and hope for the inauguration of our 5th convent at Bermersbach in Germany. Our eyes witnessed how the Lord's hands led us gracefully to this new venture even after the period of Corona pandemic and delayed Visas. Our dream of having a new convent at Bermersbach in Germany was realized by the providence of God and intercession of our Foundress Servant of God Mother Thatipathri Gnanamma, the perseverance of our Congregation, and the tireless efforts of our beloved Rev. Mother Jacqueline Mary the former Superior General, Fr.Thomas Holler, the Parish Priest of Forbach-Bermersbach.

Bermersbach is located in Forbach parish and it belongs to the Archdiocese of Freiburg. Our community is located on a small hillock. It is a scenic place with black forest in the background. An elegant ancient Church is at a stone's throw distance. Sisters will involve themselves in medical, education and parish work.

On 10.09.2023, the Catholic community of Forbach-Bermasbach gathered in St.John the Baptist Church for the Holy Mass. The Mass was celebrated by Rev.Fr.Dr.Peter Kohl, Vicar General of the Archdiocese of Freiburg and con-celebrated by Rev.Frs.Thomas Holler, Edgar Wunsch, Markus Moser, Herald Mathias Maiba and Ralph Walterspacher. During the homily, Fr.Peter Kohl expressed words of appreciation for the life and mission of our sisters in Germany.

After the Mass, Mr.Klaus, Vice President of the Parish Council, welcomed our sisters and thanked them for their presence in Bermersbach. Rev.Mother Clara Vasanthi with the sentiments of joy and gratitude honoured the main celebrant, the priests and the well-wishers with shawls and small gift packs from India and acknowledged their kindness and support in the journey of the Congregation to reach Bermersbach mission. At the end of the Mass, Srs.Vijitha Angelin and Shaiji Merlin were called to the altar and blessed by Rev.Fr.Peter Kohl.




Our hearts are overwhelmed with love and gratitude for the tireless efforts of our Congregation to establish this mission. We are faithful to the trust and confidence that you have placed in us. We earnestly request your prayers.

**Sr.Vijitha Angelin and Sr.Shaiji Merlin, Bermersbach**

## 06. New hope for the Health Mission

"O! Give thanks to the Lord for His love endures forever"



It is indeed a long-awaited dream came to a reality now. We need more Doctor sisters to work in our hospitals and health centres and to strengthen the medical mission of the Congregation. In 2022, Sr.Amala Kaviya attended NEET Examination and she passed the exam, but she could not secure a seat in the St.John's Medical College, Bangalore. With lots of perseverance and preparation, she again appeared in the NEET Examination in 2023 and she got through it. Fortunately, we were able to get a medical seat at St.Colombo College of Medical Science and Technology in Warangal. This college is managed by the Diocese of Warangal. We request you to keep Sr.Amala Kaviya in your prayers that she may successfully complete her MBBS course and serve the humanity following the footsteps of the great healer Jesus Christ.

## An ardent lover of Servant of God Mother Thatipathri Gnanamma



This article was prepared by Rev.Fr.Fernando Negro Marco and he used it for an animation programme in his Province in New York. Rev.Fr.Fernando Negro is a Spanish religious priest belonging to the Congregation of Piarists, Spain. He is devotee of Mother Gnanamma and he propagates the life and holiness of Mother Gnanamma everywhere and whatever possible by him. He serves as a Provincial of his Congregation in New York.

## The Communion of Saints

Thank you, Lord, for making us know the most beautiful vocation that is our holiness. Together with the Saints in heaven who sing your eternal praise with the angels, we also praise you on earth through our prayers and by the sacrifice of our entire lives, especially when we offer it together with the sacrifice on the altar in the Eucharist. Help us to be like your Blessed Mother, who was docile to your Word, humble, happy, delicate, pure and loving. May the Saints intercede for us sinners, now and at the hour of our death. Amen.

## A saint of our days : Mother Gnanamma - wife, mother and foundress

Gnanamma literally means “Mother of Wisdom” and Thatipathri “palm leaf”. Thatipathri Gnanamma was born in the State of Andra Pradesh in South India, specifically in Pirangipuram in 1822. When she was 15 years old, she married a Catechist in 1837. In 1858, her husband died on the way to Madras accompanying his parish priest who was going to visit the Vicar Apostolic.

At 37 years of age, Gnanamma is widowed with five children. We can imagine what it meant at that time to be a widow in the Indian context. She was rejected by society. But she found in God the strength to raise her children of whom four would end up being priests and one married. It was precisely the Vicar Apostolic of Madras who would lend a hand to educate these little ones.

At the end of 1859, Gnanamma went to Madras in Tamil Nadu to visit her children who were in the seminary. Her first idea, at the request of the Apostolic Vicar, was to settle there. However, due to the language barrier (she did not speak the Tamil language), she decided to go to Kilacheri, about 60 kilometres from Madras, where her mother tongue the Telugu language was spoken. Two of her sons were also in Kilacheri in the Franciscan seminary. And on the other hand, she had the possibility of attending the daily Eucharist. These were happening in the middle of 1860.

The parish priest of Kilacheri was then Father Arokianadar, a Franciscan. This priest who was full of apostolic zeal and seeking the glory of God, saw the lack of education of the girls in his parish, especially the poorest, and hurt by the situation, began to think about it seriously. It was then that Thatipathri Gnanamma appeared and guided by Divine Providence, spontaneously offered to carry out Arokianadar's inspiration and placed herself at his disposal. This is how Thatipathri Gnanamma, in 1862, on a plot not far from the Kilacheri parish church founded a school in which she began to gather girls and thus accepted to teach the love and fear of God.

To reach this solution, Mother Gnanamma first went to her native place in Pirangipuram, sold all her properties and with the money bought the land to build the school. This gesture reminds us of what José de Calasanz, the Founder of Piarists Fathers in Spain, did. He spent all his money in favor of the educational work he carried out. What Gnanamma did has overtones of 'revolutionary' since it was led by a woman, a widow, and it was a school exclusively for girls, at a time when education was considered almost a sin. Immediately, there were two young girls ready to help her. Some joined her in 1863. Ten years later, they were sent to be trained by the sisters of the Good Shepherd in Bellary. They were there from August 7, 1873 to October 18, 1874. On October 4, 1874, on the feast of Saint Francis of Assisi, they made their temporary profession. It was the germ of hope of a dream that Gnanamma herself could contemplate with her own eyes. Three months later, specifically on December 21, 1874, at the age of 52, Mother Gnanamma left this world, a victim of chronic asthma. Before dying she left her last words as Will:

“My Beloved Children!

- Be obedient to those who are responsible for you!
- Listen to your spiritual guides!
- Besides giving academic and religious education to girls, be the protection and solace of women!
- Learn to live as women of service and translate a love of God into love for fellow human beings!
- Do not be dependent on the Government or others financially!
- May your hard work be your protection and strength!

Her body was buried next to that of Fr.Arokianadar in a specially prepared monument in the Kilacheri cemetery. There we have the sisters of Saint Anne of Chennai our point of reference where every year we celebrate the feast of this woman who despite being illiterate, founded two congregations especially dedicated to teaching.

Why do we say that Gnanamma founded two Congregations? Because, once the sisters began to spread to other parts of India, specifically in the State of Andhra Pradesh, due to the enormous distances of those times and the language barrier, in 1897 Mother General, in common agreement with the nuns, decided to make one Congregation into two. The name of the other Congregation also widespread in India and which has Gnanamma as Foundress is that of the "Sisters of Saint Anne of Pirangipuram".

Gnanamma reminds us that more important than money, health and intelligence is absolute trust in God. The lesson of the grain of wheat is difficult to understand. Many times, we resist accepting failures, and at most, we resign ourselves to it. But authentic humility helps us to see each failure and accept it as if it were an angel from heaven coming to teach us the humanly incomprehensible ways of God.

After the death of Gnanamma, the other two sisters, also young, died very soon, leaving only one novice (Sister Joseph) who guided by the Spirit and by the strength of the Foundress who watched over her, made it possible to lay the roots of this Congregation in the heart of the Church.

Currently, there are more than 600 sisters with about 30 novices, present in 38 dioceses at the service of the Church. In addition to their presence in India, they have opened to the entire world. That is why they already have missions in Australia, Germany, Italy and Spain. Their dream is to share the mission wherever they are needed. Their vision is this: "Grow in the experience of God, in solidarity with the oppressed and contribute to the building of a just society." This is what they want to live with all their strength in the heart of the Church at the service of the Kingdom that is coming. They are guided by their institutional motto which is: "Fullness in God and Service in Simplicity".

As a litany, we record what this Foundress was and continues to be:

- Mother, widow and nun without vows ………pray for us
- Visionary woman………pray for us
- Woman, full of deep convictions……pray for us
- Woman, model of selfless and generous love……..pray for us
- Faithful and persevering woman………pray for us
- Woman, sensitive to the needs of oppressed women…….pray for us
- Woman who knew how to give and give herself without measure……..pray for us
- Simple and humble woman at the service of others……..pray for us

She has left us a legacy of personal and community spirituality:
Attitude of the one who gives without calculating.
Woman of convictions who sells what she has when she finds the treasure.
Attitude of humility, service and communion.
Unwavering faith in Divine Providence.
Religious although without professing the vows.
A daring woman and sensitive to the needs of others.
Sacrificial, persevering and generous woman.
Woman who goes beyond traditions and social prejudices.
Visionary woman who made the school to promote the dignity and respect of women.
Model of unconditional love.

Mother Thatipathri Gnanamma was proclaimed Servant of God by the Catholic Church on January 21, 2014.
Fernando Negro Marco, Sch.Q.




**Mother Gnanamma's picture drawn by Rev. Fr. Fernando Negro Marco**

## An activity for Junior sisters

Dear Juniors,

You are the future pillars of our Congregation. You need to get connected with the inner spirit and holiness of our Foundress Servant of God Mother Thatipathri Gnanamma. I want you to read the books related to the history of our Foundress and respond to the following questions:

01. Who is our Foundress personally for you?
02. How do you live the inner spirit of Mother Gnanamma in your day to day life?
03. What is your personal devotion to our Mother?

**Write your responses as an article (up to 5 pages) and submit it to your Junior Mistress by 5th December without fail.**

(Junior Mistresses: Srs. Jessy Joseph, Deepika, Jose Hamlin, Jenisa and Stara)

Note to the Junior Mistresses:

Kindly motivate the junior sisters. After collecting the assignment from them, submit the same to Sr. Catherine, the General Secretary. Your cooperation and goodwill is highly appreciated. Thank you.

அன்புள்ள சகோதரிகளுக்கு வாழ்த்தும், வணக்கமும்.

இத்தகவல் பகிர்வின் மூலம் உங்களுடன் தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். 'ஆண்டவரின் கண்களில் நமக்கு அருள் கிடைத்ததுள்ளது' என உணர்ந்த, உணர வைத்த சில தருணங்களை, நிகழ்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்வு அடைகிறேன்.

- 'குயவனின் கரங்களில் களிமண் நாம்' - விருப்பநிலை உருவாக்கம் பற்றிய ஒரு பார்வை.
- புகுமுகநிலை மற்றும் நுழைவுநிலை உருவாக்க இல்லங்களின் செயல்பாடுகள்.
- கனவு நனவாகியது - ஜெர்மனியில் 5வது புது இல்லம்
- மருத்துவர் பயிற்சியில் ஓர் அருட்சகோதரி

மேற்கண்ட இத்தகவல்களை இச்செய்திமடலில் வாசித்து இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

செய்தித்தாளில் தினமும் அரைபக்க செய்தியாக உக்ரேன் - ரஷ்யா போர், இஸ்ரேல் - பாலஸ்தீனம் போர் வெளிவருகிறது. இது நாளும் வளர்ந்து வரும் வன்முறை, தீவிரவாத கலாச்சாரம், இதனால் எற்படும் பேரழிவை நமக்கு படம்பிடித்து காட்டுகிறது. திருத்தந்தை அமைதிக்காகவும், சமாதானத்திற்காகவும் செபிக்க நம்பிக்கையாளர்களுக்கு அடிக்கடி அழைப்பு விடுப்பதையும் நாம் அறிவோம். நம்மில் எத்தனை பேருக்கு இப்போர்களின் பின்னணி, எவ்வாறு உலக நாடுகள் இதில் இணைத்துக் கொள்கின்றன? இதில் இந்திய நாட்டின் பங்கு என்ன? என புரிந்து கொள்ள முயல்வோம். இந்த இக்கட்டானச்சூழலின் பின்புலத்தை செய்தித்தாளை வாசித்து அறிவோம். வெறுப்பும், பகைமை உணர்வும், சகிப்புத்தன்மையற்றப்போக்கும், பேராசையும் எவ்வாறு பெரிய அழிவை ஏற்படுத்துகின்றன என உணர்ந்து கொள்வோம். நம் உள்ளங்களில் இருக்கின்ற தீய குணங்களை வேரறுத்து,

அமைதிக்காக செபிக்க முன்வருவோம். இந்த நவம்பர் மாதத்தில் போர் மற்றும் இயற்கைப்பேரிடரால் மரித்த யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக சிறப்பாக செபிப்போம்.

சகோதரிகள் அனைவரும் உடல், உள்ள சுகத்தோடு கிறிஸ்துவை தன்னிலே தாங்கியவர்களாய், பிறருக்கு சிறப்பாக வறியோருக்கும், நலிந்தோருக்கும் வாழ்வளிப்பவர்களாக வாழ எனது வாழ்த்துக்களும், செபங்களும்.
என்றும் அன்புடன்

Sr. Clara Vasanthi SSAM.

அருட்சகோதரி கிளாரா வசந்தி

### 01. விருப்பநிலை உருவாக்கம், ஏற்காடு



எல்லாத்துறைகளிலும் தொழில்நுட்பம் நினைத்து பார்க்க இயலாத உச்சத்தைத் தொடுகின்ற இக்காலகட்டத்தில், எளிமையான துறவற வாழ்வு என்பது இன்றைய தலைமுறைக்கு அரிய நிகழ்வாகி விட்டது. இயந்திரமயமாக்கப்பட்ட இவ்வுலகில், இறைவனின் அருளுக்கும், இரக்கத்திற்கும் சாட்சியாக 17 இளம் பெண்களை இறைவன் நம் சபைக்கு அளித்துள்ளார். துறவற வாழ்வில் ஆர்வம் கொண்ட இளம் பெண்கள் ஏற்காட்டிலுள்ள நுழைவுநிலை உருவாக்க இல்லத்திற்கு ஏப்ரல் மாத இறுதியில் வந்தனர். மே மாதம் வரை மகிழ்ச்சியும், விளையாட்டும், இசையும் நிறைந்த நாட்களாக இருந்தன. இளம் பெண்களும் ஆங்கிலம், பாடல், கலைகள், செயல்வழி கற்றல், நடித்தல், நடனம் என அனைத்தையும் ஆர்வமுடன் கற்றனர். ஜீன் மாதம் 2 - 3 தேதிகளில் ஏற்காட்டில் உள்ள சலேசிய அருட்தந்தையர்களால் இவ்வருடத்திற்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டது.

### ○ இறைவனை அறிந்து கொள்ள, இறையனுபவம் பெற

விருப்பநிலையினரின் உள்ளத்தில் 'என்னை அழைத்த இறைவன் யார்? எப்படிபட்டவர்?' என்ற தேடலை, உருவாக்க செபம், தியானம், ஆராதனை, திருப்பலி மற்றும் விசுவாசப்பகிர்தல் என இசைவான ஆன்மீகச்சூழல் அமைத்து தரப்படுகிறது, பயிற்றுவிக்கப்படுகிறது. இதன் உச்சக்கட்டமாக 12 மணிநேர ஆராதனையில் ஆர்வமுடன் விரும்பி விருப்பநிலையினர் பங்கு கொள்கின்றனர். இது இவர்களுக்கு புதிய, மறக்க இயலாத இறையனுபவமாக அமைகிறது. தங்களின் விசுவாசத்தை ஆழப்படுத்த செபமாலை, நற்செய்தி அறிமுக வகுப்புகள், ஆன்ம சோதனை போன்றவை பெரிதும் உதவுகின்றன. மற்றும் விருப்பநிலையினர் தங்களின் உடன் வாழும் சகோதரிகளுடன் நட்புறவு கொள்ளவும், இறையழைத்தலை தேர்ந்து தெளியவும், அதனை உறுதிபடுத்தவும் உறுதுணையாக இருக்கின்றன.

### ○ சமூக, குழும விழுமியங்களை வளர்த்தல்

தனிமனித ஒழுக்கம் மற்றும் நன்நெறிகள் ஒட்டுமொத்த உருவாக்கத்தின் இன்றியமையாத பகுதி என்பதை உணர்ந்து, விருப்பநிலையினர் அமைதி, உருவாக்க இல்லத்தின் தூய்மை பணிகள், தோட்டப்பணிகள் இவற்றில் ஆர்வமுடன் ஈடுபட ஊக்குவிக்கப்படுகின்றனர். மேலும் அருகாமையில் உள்ள முதியோர் இல்லத்தைச் சந்திக்கவும் மற்றும் அன்பியங்கள் கூட்டத்திற்கு சென்று பங்கெடுக்கவும் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

### ○ அறிவாற்றலை வளர்ப்பதில் கவனம்

விருப்பநிலையினரின் நுண்ணறிவை வளர்த்தெடுக்க ஆங்கில இலக்கண வகுப்புகள், விவிலியம் பற்றிய அடிப்படை அறிவு, மறைக்கல்வி, உணர்வுகளுடன் சிந்தனையை வெளிப்படுத்த உதவும் தொடர்புத்திறன்கள் இவற்றில் தேவையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேலும் மலர் கொத்து தயாரித்தல், கைவினைப்பொருட்கள் செய்தல் ஆகிய செயல்பாடுகளில் ஈடுபடுத்தி விருப்பநிலையினர் படைப்பாற்றலிலும், முதிர்ச்சியிலும் வளர ஊக்குவிக்கப்படுகின்றனர்.

விருப்பநிலையில் பயிற்சி பெறும் இவர்களை கண்ணும் கருத்துமாக தாயன்போடு கவனித்துக் கொள்ள உருவாக்குனர் அருட்சகோதரிகள் ஷில்பா, லியோடி பணியாற்றி வருகின்றனர். இவ்வரிய வாய்ப்பினை அளித்த இறைவனுக்கும், தாய்சபைக்கும் விருப்பநிலையினர் நன்றி கூறுகின்றனர். இவர்கள் நன்கு உருவாக்கம் பெற்று நல்ல துறவியராய் வாழ்ந்திட உங்களின் செப உதவியை நாடுகின்றனர்.

**சகோதரிகள் ஷில்பா, லியோடித், ஏற்காடு**

## *02. புகுமுகநிலை உருவாக்கம்*



உருவாக்கம் என்பது இறைவனின் செயல். தூயஆவியாரே முதன்மை உருவாக்குனர். உருவாக்குனர் சகோதரிகள் இறைவனின் கரங்களில் ஒரு கருவியாய் செயல்பட்டு இறைவனின் அழைப்பிற்கு 'ஆம்' என்று பதிலளிக்கும் இளம் பெண்களை இறைவனின் திட்டத்திற்கு ஏற்ப உருவாக்குகின்றனர். இந்த உருவாக்க நிலைகளில் 'புகுமுகநிலை' முக்கிய பங்கினை வகிக்கிறது. இறையழைத்தலுக்கு உரமூட்டி நுழைவு நிலைக்கு தம்மை தயாரிக்கும் நிலையே 'புகுமுகநிலை'.

இவ்வருடம் மே மாதம் முதலாம் ஆண்டு பயிற்சியினை ஏற்காட்டில் முடித்த 6 இளம் பெண்கள் பெங்களூர், தம்புசெட்டிபாளையத்தில் உள்ள புகுமுகநிலை இல்லத்திற்கு வருகை தந்தனர். உருவாக்குனர் அருட்சகோதரிகள் சுசி பெர்னாட் மற்றும் பாத்திமா ராணி இந்த இளம் பெண்களை இன்முகத்துடன் வரவேற்றனர். அறிமுக நிகழ்வுடன் இவ்வாண்டிற்கான உருவாக்க நிகழ்வுகள் துவங்கியது.

புகுமுகநிலையினர் தங்கள் இறையழைத்தலை உறுதிபடுத்த தகுந்த செபஅமர்வுகள், தியானம், ஆராதணை குறிப்பாக திருப்புகழ்மாலை செபிக்க கற்றுக்கொள்ளுதல், மற்றும் பல ஆன்மீக பயிற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வழிகாட்டப்படுகின்றனர். தங்களின் ஆளுமைத்திறனை வளர்த்தல், விவிலியத்தை நுணுக்கமாகப் புரிந்து கொள்ளுதல், ஆங்கில மொழித்திறனை வளர்த்தல், உடல் மற்றும் சுற்றுப்புற ஆரோக்கியம் குறித்து அறிந்து கொள்ளல் என பல வழிகளில் வளர்த்தெடுக்கப்படுகின்றனர்.

இத்தகைய அரிய வாய்ப்பினை புகுமுகநிலையினருக்கு வழங்கிய இறைவனுக்கும், தாய்சபைக்கும் எங்களின் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த இளம் பெண்களின் உருவாக்கத்தில் துணை நிற்கும் சபைத்தலைமையன்னை, பொதுஆலோசகர்கள், மாநிலத்தலைவிகள், வட்டாரத்தலைவிகள், அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். புகுமுகநிலையினர் இன்னும் சிறப்பாக உருவாக்கம் பெற்றிட உங்களின் செபத்தில் அவர்களை நினைவு கூற வேண்டுகிறோம்.

**சகோதரிகள் சுசி பெர்னாட், பாத்திமா ராணி, தம்புசெட்டிபாளையா**

## *03. நவக்கன்னியர் உருவாக்கம் - இறை உறவில் வளரும் வாய்க்கால்*

'இறையழைத்தல் ஓர் அன்பின், அன்புக்கான அழைப்பாகும்' - திருத்தந்தை பிரான்சிஸ்



மாதவரத்தில் உள்ள நவக்கன்னியர் இல்லத்தில், துறவறப்பயிற்சியில் ஈடுபட்டுள்ள 13 நவக்கன்னியர்களாகிய நாங்கள் எங்களின் அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் அளவற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறோம்.

நவக்கன்னியர்களாகிய நாங்கள், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவட்டில், நம் சபை நிறுவுனர் இறை ஊழியர் அன்னை தாட்டிபத்திரி ஞானம்மாவின் உள்ளுயிர், நோக்கம் மற்றும் பணிவாழ்வை முதன்மையாகக் கொண்டு, நம் சபையின் நடப்பு ஆண்டின் மையக்கருத்தை உள்வாங்கி இறை உறவில் வளர்ந்து, இறைமக்களுக்காக வாழ அனைத்து வாய்ப்புகளும் பெறுகிறோம்.

இங்கு நாங்கள் பெறும் ஒவ்வொரு அனுபவமும், அளிக்கப்படும் வகுப்புகளும் எங்களின் அழைப்பின் நோக்கத்தை தெளிவாக உணர்ந்து, இறைவனில் இணைய துணை புரிகிறது. கிறிஸ்துவை தாங்க, ஆன்மீகம், ஆளுமை வளர்ச்சி, அறிவு மற்றும் அப்போஸ்தலிக்க சமுதாய வாழ்வுக்கான உருவாக்கம் அளிக்கப்படுகிறது.

## எங்களைத் தொட்ட சில நிகழ்வுகள்

'நல்ல மனச்சான்றை உருவாக்கிட' என்னும் தலைப்பில் அருட்தந்தை செல்வகுமார் SDB அவர்கள் எங்களை வழிநடத்தினார். மனச்சாட்சி என்பது கடவுளின் குரல். இது ஒரு புனிதமும் ரகசியமும் கொண்ட நிலையாகும். 9 வகையான மனச்சட்சிகளைக் குறித்து அறிந்து கொண்டோம். மனச்சாட்சி என்பது அனைவருக்கும் பொதுவானது, ஆனால் சரியான, முறையான மனச்சட்சியில் நாம் வாழ்கின்றோமா? என்பதே மிகவும் முக்கியம். கடவுளோடு இணைந்து வாழும் போது மட்டுமே நல்ல மனச்சாட்சியில் வாழ முடியும் என்றும் உணர்ந்து கொண்டோம். எங்களின் பலம் மற்றும் பலவீனங்களை ஆய்வு செய்ய வகுப்பிலே பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

சமூக மற்றும் திருஅவையின் கண்ணோட்டத்தில், 'சமூக, அரசியல் மற்றும் கலாச்சார பகுப்பாய்வு' குறித்த கருத்துக்கள் அருட்தந்தை செபாஸ்டின் SDB அவர்களால் அளிக்கப்பட்டது. சமுதாயத்தில் கட்டமைப்பு மற்றும் துறவியரின் கடமைகளைப் புரிந்து கொள்ள இந்த வகுப்பு பெரிதும் உதவியது. கீழ்கண்டவைகளையும் நாங்கள் தெளிவாக புரிந்து கொண்டோம்:

- திருவிவிலியத்தை அறிந்து கொள்வதை விட, வாழும் திருவிவிலியங்களாக மாற வேண்டும்.
- துறவிகளுக்கு தொழிலில் நிறைவு, ஆன்மீகத்தில் விரக்தி எதிரியாக இருக்க வேண்டும்.
- என் பணி முடிந்து விட்டது என்னும் அலட்சியப்போக்கு கொள்ளாமல், நான் 24x7 பணியாளன் என்ற மனநிலை கொண்டு வாழ்வதோடு, சமமான, நியாயமான சகோதரத்துவ சமுதாயத்தை உருவாக்கவே நான் அழைக்கப்பட்டுள்ளேன்.

### ○ பசுமையை போற்றுவோம்

உருவாக்கத்தின் முதல் நாளிலிருந்து, நம் சபை தலைமையன்னையின் வழிகாட்டுதலோடும், தலைமையகத்தில் உள்ள அருட்சகோதரிகளின் உடனிருப்போடும், பணியாளர்களோடும் சேர்ந்து, பயன்படுத்தப்பட்ட தண்ணீர் குப்பிகளை சேர்த்து, வண்ணம் தீட்டி, மருத்துவம், பூக்கள், அழகுச்செடிகள் மற்றும் மாமரக்கன்றுகளை வளர்த்தோம்.

### ○ மரக்கன்றுகள் வழங்கினோம்

மூத்த குடிமக்கள் தினம், சபை பாதுகாவலி புனித அன்னாள் பெருவிழா மற்றும் சபையின் துணை பாதுகாவலர் புனித பிரான்சீஸ் பெருவிழா அன்று 500க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை இலவசமாக பங்கு மக்களுக்கு வழங்கினோம்.

### ○ செபமாலை தயாரித்தல்

துறவற வாழ்வில் புனிதப்பொருட்கள் முதன்மை பங்கு வகிக்கிறது. இந்த ஆண்டில் நாங்கள் பல்வேறு படைப்பாற்றலிலும், திறமைகளிலும் வளர நிறைய வாய்ப்புகள் வழங்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக செபமாலை தயார் செய்வதற்கு கற்றுக்கொண்டோம். நாங்கள் செய்த செபமாலையைக் கொண்டு செபிக்கும் போது மிகுந்த ஆர்வமும், தினமும் செபமாலை செபிக்க உத்வேகமும் ஏற்பட்டது. சிறப்பாக அக்டோபர் மாதத்தின் முதல் நாளிலிருந்து அனைத்து மறையுண்மைகளையும் தியானித்து செபமாலை செபிக்க தீர்மானம் எடுத்தோம். மாலை நேரங்களில் குடும்பங்களைச் சந்தித்து அவர்களோடு செபமாலை செபித்தோம். அக்டோபர் மாதத்தின் இறுதி நாளில் செபமாலை கண்காட்சியானது நடைபெற்றது. எங்களில் முதல் மூன்று இடம் பெற்றவர்களுக்கு சிறப்புப்பரிசும், அனைவருக்கும் ஆறுதல் பரிசும் சபைத்தலைமையன்னை அவர்களால் வழங்கப்பட்டது.

இவற்றோடு எங்களிடம் உள்ள திறமைகளை வளர்த்தெடுக்கவும், வெளிக்கொணரவும் பலதரப்பட்ட வாய்ப்புகள் வழங்கப்படுகிறது. நம் சபைத்தலைமையக வளாகத்தில் இருப்பதும், தியானம் மற்றும் பல்வேறு அமர்வுகளுக்கு வரும் நம் சபை அருட்சகோதரிகளை சந்தித்து உரையாடுவதும், அவர்களுக்கு அவ்வப்போது உதவுவதும், எங்களில் சபைப்பற்றும், சபையின் மீது அன்பும் வளர தூண்டுதலாக இருக்கிறது. நாங்கள் எங்களின் அழைப்பில் ஆழப்படவும், இறைஉறவில் வளரவும் எங்களுக்காக செபிக்க உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**சகோதரிகள் பிரைடா, அமலா, ஆரோக்கிய ஷில்பா, மாதவரம்**

### *04. ஜெர்மனி ஐந்தாம் இல்லம் திறப்பு*



நம் சபையின் பணிகளுக்கு, குறிப்பாக ஜெர்மனியில் நாம் ஆற்றும் பணிக்கு வலுசேர்க்க இன்னொரு இல்லம் உதயமானது. மூன்று ஆண்டுகளாக காத்திருந்து நிறைவேறியது இந்த இனிய நிகழ்வு. ஜெர்மனி பிரைபூர்க் உயர்மறைமாவட்டம், பார்பாக் பங்கைச் சார்ந்த பெமர்ஸ்பாக் என்ற கிளைப்பங்கில் 10.09.2023 அன்று 5-வது இல்லம் திறக்கப்பட்டு, புனிதப்படுத்தப்பட்டது.

கொரோனா தீநுண்மி தொற்று ஏற்படுத்திய பேரிடர், விசா பெறுவதில் வந்த பெரும் தடங்கல்கள், வழக்கத்திற்கு மாறாக வந்த புதிய வழிமுறைகள், ஜெர்மன் மொழி கற்பதில் உள்ள சிரமங்கள் இவற்றையெல்லாம் கடந்து இந்த இல்லம் துவங்கப்பட்டுள்ளது. நமது முன்னாள் சபைத்தலைவி ஜாக்குலின் மேரி, பெமர்ஸ்பாக் பங்குத்தந்தை தாமஸ் ஹோலர் இவர்களின் நீடித்த பொறுமை மற்றும் கூட்டுமுயற்சியின் வழியாக இறைத்திருவுளம் நிறைவேறியதை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

ஜெர்மனியில் உள்ள நமது நான்கு இல்லங்களின் பங்குதந்தையர்கள் மற்றும் பிற அருட்தந்தையர்கள் இணைந்து உயர்மறைமாவட்டத்தின் முதன்மைகுரு மற்றும் துறவற சபைகளின் பொறுப்பாளர் அருட்தந்தை பீட்டர் கோல் அவர்களால் எழில் மிகுந்த, பழங்கால கட்டடக்கலைக்கு கட்டியம் கூறும் பங்குகோவிலில் ஆடம்பர கூட்டுத்திருப்பலி 10.09.2023 அன்று நடைப்பெற்றது. பின்னர் நம் இல்லம் மந்திரிக்கப்பட்டது. திருப்பலியில் ஜெர்மனியில் பணியாற்றும் நம் சபை சகோதரிகளின் வாழ்வுமுறை மற்றும் பணிகளை பாராட்டி சபைக்கு முதன்மை குரு நன்றி கூறினார். பேமர்ஸ்பாக் குழுமத்தில் பணியாற்றவிருக்கும் அருட்சகோதரிகள் விஜிதா ஆஞ்சலின், ஷைஜி மெர்லின் இருவரையும் பீடத்திற்கு அழைத்து சிறப்பு ஆசீர் அளித்து வாழ்த்தினார். இறைமக்கள் அனைவரும் இப்பகுதியில் கிறிஸ்துவின் பிரசன்னம் நம் சகோதரிகளின் இருப்பால், பணியால் பலம் பெற வேண்டும் என விரும்பி செபித்தனர்.

சபைத்தலைமையன்னை புதிய இல்லம் உதயமானதில் தங்களின் பங்களிப்பை அளித்த அனைவரையும் பாராட்டி, நன்றி கூறி, நினைவு பரிசினை வழங்கினார். தொடர்ந்து சகோதரிகள் இசையுடன் நன்றிபண் இசைக்க, கொடிகள் ஏந்திய பவனியுடன் திருப்பலி இனிதே நிறைவு பெற்றது. திருப்பலியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிறப்பு தேனீர் விருந்து பரிமாறப்பட்டு வாழ்த்துக்களையும், உறவுகளையும் அனைவரும் பகிர்ந்து கொண்டனர்.



பங்கு மக்களால் தாராளமாக வழங்கப்பட்ட இந்த இல்லம் கருப்புக்காட்டின் அடிவாரத்தில் இயற்கை எழில் கொஞ்சும் அழகானச்சூழலில், அழகிய விண்ணை முட்டும் கோபுரம் கொண்ட சிற்றாலயத்தின் அருகாமையில் பெமர்ஸ்பாக் கிராமத்தில் அமைந்துள்ளது. அருட்சகோதரிகள் தங்க வசதியாக இல்லத்தை சிறப்பாக புதுப்பித்து அளித்த அருட்தந்தை தாமஸ் ஹோலர் மற்றும் பங்குப்பேரவைக்கு நன்றி கூறுகிறோம். மேலும் எங்கள் மீது நம்பிக்கை கொண்டு பணியாற்ற அழைத்த நம் தாய் சபைக்கு எங்களது நன்றியினை உரித்தாக்குகிறோம். கிறித்தவ விசுவாசம் நலிந்து வரும் ஐரோப்பிய கலாச்சாரத்தில் கிறிஸ்துவின் சீடர்களாய் வாழ்ந்து எங்களின் இருப்பாலும், பணியாலும் விசுவாசத்தை பலப்படுத்துவோம் என உறுதி அளித்து எங்களுக்காக செபிக்கும்படி உங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

**சகோதரிகள் விஜிதா ஆஞ்சலின், ஷைஜி மெர்லின், பெமர்ஸ்பாக்**

### *05. மருத்துவக்கல்வி பயிலும் நம் சகோதரி*

மருத்துவர் சகோதரிகள் உருவாக்கப்பட வேண்டும் என்பது நம் சபையின் நீண்ட நாள் கனவு. இறையருளால் இன்று இதற்கு ஒரு வழி திறந்துள்ளது. நமது சகோதரி அமல காவியா கடந்த ஆண்டு சில மாதத்தயாரிப்பிற்குப்பின் நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றார். இருப்பினும் மதிப்பெண் தரப்பட்டியலில் கடந்த ஆண்டு பெங்க;ரில் புனித ஜான் மருத்துவக்கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. விடாமுயற்சியுடன் மீண்டும் ஒரு வருட கால தயாரிப்பிற்குப்பின், நீட் தேர்வு எழுதி, அதில் தேர்ச்சியும் பெற்றார். வாரங்கல் மறைமாவட்டத்தால் நடத்தப்படும் புனித கொலோம்போ மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் இணைந்து தற்போது முதலாம் ஆண்டு பயில்கிறார். இவர் அறிவு கூர்மையுடனும், சேவை மனப்பான்மையுடனும் இயேசுவின் குணமளிக்கும் ஆன்மீகத்தை தனதாக்கி சிறந்த மருத்துவராக உருவாகிட சிறப்பாக செபிப்போம். இவ்வரிய வாய்ப்பினை அளித்த இறைவனுக்கும், இம்முயற்சியில் துணை நின்ற அனைவருக்கும் நன்றி.

### *இறைஊழியர் அன்னை ஞானம்மாவின் ஆன்மீக புதல்வரின் அனுபவம்*



அருட்தந்தை பெர்னாண்டோ நேக்ரோ மார்கோ அவர்களால் கீழ்காணும் இக்கட்டுரை எழுதப்பட்டது. அவர் நியூயார்க்கில் உள்ள தனது மாநிலத்தில் ஆன்மீக வழிநடத்தல் நிகழ்ச்சி ஒன்றிற்காக இதைப் பயன்படுத்தினார். அருட்தந்தை பெர்னாண்டோ ஸ்பெயின் நாட்டில் பியாரிஸ்டு சபையைச் சார்ந்த அருட்தந்தை ஆவார். அவர் அன்னை ஞானம்மாவின் தீவிர அன்பு கொண்டவர் மற்றும் அன்னை ஞானம்மாவின் வாழ்க்கையையும் புனிதத்தையும் எங்கும் பரப்புவதில் ஆர்வம் உடையவர். நியூயார்க்கில் தம் சபையின் மாநிலத்தலைவராக அவர் பணியாற்றி வருகிறார்.

### *புனிதர்களின் தோழமையில்*

எங்களது புனிதமான, மிக அழகான தேவஅழைத்தலை எங்களுக்கு உணர்த்தியமைக்கு நன்றி ஆண்டவரே! தேவதூதர்களுடன், உமது நித்திய புகழைப்பாடும் விண்ணகத்தில் உள்ள புனிதர்களுடன் சேர்ந்து, இவ்வுலகில் எங்களது செபங்கள் மூலமாகவும், எமது முழுவாழ்க்கையையும் தியாகம் செய்வதன் மூலமாகவும், குறிப்பாக நற்கருணை பலிப்பீடத்தில் திருப்பலியுடன் அதைச் செலுத்தும் போது, உம்மைப் புகழ்கிறோம். உமது வார்த்தைக்கு திறந்த மனத்துடனும், தாழ்ச்சியாகவும், மகிழ்ச்சியாகவும், கனிவாகவும், தூய்மையாகவும், அன்பாகவும் இருந்த உமது ஆசீர்வதிக்கப்பட்ட அன்னையைப் போல் இருக்க எங்களுக்கு உதவியருளும். பாவிகளாகிய எங்களுக்காக இப்போதும், எங்கள் மரண நேரத்திலும் அனைத்து புனிதர்களும் பரிந்து பேசுவார்களாக. ஆமென்.

### *இன்றைய புனிதர் : அன்னை ஞானம்மா - மனைவி, தாய் மற்றும் சபை நிறுவுனர்*

ஞானம்மா என்றால் “ஞானத்தின் தாய்” என்றும், தாட்டிப்பத்திரி என்றால் “பனை ஓலை” என்றும் பொருள்படும். 1822ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் உள்ள ஆந்திரபிரதேசம் மாநிலம் பிரங்கிபுரத்தில் தாட்டிபத்ரி ஞானம்மா பிறந்தார். அவருக்கு 15 வயதாக இருந்த போது, 1837ஆம் ஆண்டு வேதியரான இன்னையாவை மணந்தார். 1858ஆம் ஆண்டில், அவரது கணவர் தனது பங்குத்தந்தையுடன் பேராயரைப் பார்க்க மெட்ராஸ் செல்லும் வழியில் இறந்தார்.

37-வது வயதில் ஐந்து குழந்தைகளுடன் ஞானம்மா விதவையானார். இந்தியச்சூழலில் அன்றையக்காலக்கட்டத்தில் ஒரு விதவையின் வாழ்வு எவ்வளவு கடுமையாக இருந்திருக்கும் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியும். அவர் சமூகத்தால் நிராகரிக்கப்பட்டார். ஆனால் அவர் தனது குழந்தைகளை வளர்ப்பதற்கான பலத்தை இறைவனிடம் கண்டார். ஐந்து புதல்வர்களுள் நால்வர் குருத்துவ வாழ்வையும், ஒருவர் இல்லற வாழ்வையும் தேர்ந்து கொண்டனர். இக்குழந்தைகள் ஐவரும் கல்வி கற்க மெட்ராஸ் பேராயர் பெரும் துணையாக இருந்தார்.

1859ஆம் ஆண்டின் இறுதியில், குருமடத்தில் இருந்த தனது குழந்தைகளைப் பார்க்க ஞானம்மா தமிழ்நாட்டில் உள்ள மெட்ராஸ் சென்றார். பேராயரின் வேண்டுகோளின்படி மெட்ராஸில் குடியேறவும் தீர்மானித்தார். ஆனால் மொழித்தடையின் காரணமாக (அவர் தமிழ் மொழி அறியாதவர்), மெட்ராஸிலிருந்து சுமார் 60 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கீழச்சேரிக்கு செல்ல முடிவு செய்தார். ஏனெனில் அவரது தாய் மொழியான தெலுங்கு மொழி கீழச்சேரியில் பேசப்பட்டது. அத்துடன் அவருடைய இரண்டு மகன்களும் பிரான்சீஸ்கன் குருமடத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தனர். மேலும் தினசரி திருப்பலியில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் ஞானம்மாவிற்கு இருந்தது. இந்நிகழ்வுகள் அனைத்தும் 1860ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நடந்தன.

அப்போது கீழச்சேரி பங்குகுருவாக இருந்தவர் பிரான்சீஸ்கன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை ஆரோக்கியநாதர் ஆவார். பணித்துவ ஆர்வத்துடன், இறைவனின் மகிமையைத்தேடிய இந்த அருட்தந்தை, தனது பங்கில் பெண்கள் குறிப்பாக ஏழைகள் கல்வியறிவு அற்றவர்களாக இருப்பதைக்கண்டு, வேதனையுற்றார். அதைப்பற்றி தீவிரமாக சிந்திக்கத்தொடங்கினார். இச்சூழலில் தான் அன்னை ஞானம்மா கீழச்சேரி வந்தடைந்தார். இறைஉந்துதலால் வழிநடத்தப்பட்டு, அருட்தந்தை ஆரோக்கியநாதரின் உத்வேகத்தை, எண்ணத்தை நிறைவேற்ற தன்னிச்சையாக அவர் முன்வந்தார். மேலும் அருட்தந்தை ஆரோக்கியநாதரின் வழிநடத்தலில் செயல்படவும் துணிந்தார். இப்படித்தான் 1862ஆம் ஆண்டு, கீழச்சேரி பங்கு ஆலயத்திற்கு சிறிது தொலைவில் உள்ள ஒரு இடத்தில் தாட்டிபத்ரி ஞானம்மா பள்ளியை நிறுவினார். அப்பள்ளியில் அவர் பெண்களை மட்டுமே சேர்க்கத் தொடங்கினார்.

தனது கனவை நிறைவேற்ற, அன்னை ஞானம்மா தனது சொந்த ஊரான பிரங்கிப்புரத்திற்கு சென்று, தனது சொத்துக்கள் அனைத்தையும் விற்று, அப்பணத்தைக் கொண்டு பள்ளிக்கூடம் கட்ட நிலத்தை வாங்கினார். அன்னை ஞானம்மாவின் இச்செயல், ஸ்பெயினில் பியாரிஸ்ட் சபை அருட்தந்தையர்களின் நிறுவனர் தந்தை ஜோஸ் டி கலாசன்ஸ் என்ன செய்தார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. அருட்தந்தை ஜோஸ் டி கலாசன்ஸ் தான் ஆற்றிய கல்விப்பணிகளுக்கு தனது செல்வமனைத்தையும் செலவழித்தார். ஒரு பெண், அதுவும் ஒரு விதவைப்பெண்ணின் இந்த முன்னெடுப்புச்செயல் ''புரட்சிகரமானது'' என காணப்படுகிறது. அதுவும் பெண்களுக்கு கல்வி அளிப்பதை பாவமாகக் கருதிய காலக்கட்டத்தில் ஞானம்மா செய்தது நிச்சயமாக பெரும் புரட்சி என்றே கூறலாம்.

அன்னையின் சேவையால் ஈர்க்கப்பட்ட இரண்டு இளம் பெண்கள் அவரோடு இணைந்து பணியாற்ற முன்வந்தனர். அவர்கள் 1863ஆம் ஆண்டு அவருடன் சேர்ந்தனர். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு, பெல்லாரியில் உள்ள நல்லாயன் சபை சகோதரிகள் மூலம் துறவறப்பயிற்சிப்பெற இவ்விருவரும் அன்னை ஞானம்மாவால் பெல்லாரிக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் ஆகஸ்ட் 7, 1873 முதல் அக்டோபர் 18, 1874 வரை அங்கு தங்கியிருந்தனர். அக்டோபர் 4, 1874 அன்று, புனித பிரான்சீஸ் அசிசியார் திருநாளன்று, இவ்விருவரும் தங்களின் முதல் நேர்ச்சைப்பாட்டை ஏற்றனர். தனது கனவினை ஞானம்மா தனது கண்களால் நனவாகக் கண்டு ஆனந்தம் கொண்டார். இந்நிகழ்வின் மூன்று மாதங்களுக்குப்பிறகு, நாள்பட்ட ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டிருந்த அன்னை ஞானம்மா, டிசம்பர் 21, 1874 அன்று, தனது 52வது வயதில், இவ்வுலகை விட்டு மறைந்தார்.

இறக்கும் தருவாயில் அன்னை விட்டு சென்ற முத்தான வார்த்தைகள் பின்வருமாறு:

''என் அன்பு செல்வங்களே!
உங்களுக்கு பொறுப்பாய் உள்ளவர்களுக்கு பணியுங்கள்.
ஆன்மீக வழிகாட்டிகளுக்கு செவிமடுங்கள்.
இளம் பெண்களுக்கு மறைக்கல்வி, பிறகல்வியுடன்
அடைக்கலமும், பாதுகாப்பும் தாருங்கள்.
இறையன்போடு கலந்த பிறரன்புடன்
பிறர்சேவைக்கென வாழ கற்றுக் கொள்ளுங்கள்.
பணஉதவிக்கு அரசையோ, பிறரையோ நம்பியிராமல்
கடின உழைப்பை மேற்கொண்டு உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்''

அவரது உடல் அருட்தந்தை ஆரோக்கியநாதர் கல்லறைக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டு நினைவு சின்னமாக கீழச்சேரியில் ஓங்கி நிற்கிறது. படிப்பறிவில்லாதவராக இருந்தாலும், பெண்களுக்கு கல்வி என்ற நோக்கோடு பணியாற்ற இருபெரும் சபைகளை உருவாக்கிய பெருமை அன்னை ஞானம்மாவைச் சாரும். இதனை நினைவுகூர்ந்து புனித அன்னாள் சபை சகோதரிகள் ஒவ்வொரு ஆண்டும் கீழச்சேரியில் அன்னை ஞானம்மாவிற்கு நினைவு நாள் சிறப்பிப்பது வழக்கம்.

ஞானம்மா இரண்டு சபைகளை நிறுவினார் என்று ஏன் சொல்கிறோம்? சகோதரிகள் இந்தியாவின் பிற பகுதிகளுக்கு, குறிப்பாக ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் பரவத் தொடங்கியவுடன், அக்காலத்தின் அபரிமிதமான தூரத்தாலும், மொழித்தடையாலும், 1897ஆம் ஆண்டு சபைத்தலைவியாக இருந்த அன்னை, மற்ற சகோதரிகளின் ஒப்புதலுடன், சபை இருவேறு சபைகளாக - இரண்டாக - இயங்க முடிவு செய்தார். இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட இரண்டாவது சபையின் பெயரும் இந்தியா முழுவதிலும் பரவலாக அறியப்பட்ட ஒன்று. அன்னை ஞானம்மாவை தனது நிறுவுனராகக் கொண்ட அச்சபை, ‘‘புனித அன்னாள் சபை - பிரங்கிபுரம்’’ என்ற பெயரில் இயங்கி வருகிறது.

பணம், ஆரோக்கியம் மற்றும் புத்திசாலித்தனத்தை விட இறைவன் மீது கொள்ளும் முழுமையான நம்பிக்கையே முக்கியம் என்பதை ஞானம்மா நமக்கு நினைவூட்டுகிறார். கோதுமை மணியின் பாடத்தைப் புரிந்துக் கொள்வது கடினம். பல சமயங்களில், தோல்விகளை ஏற்றுக்கொள்வதை நாம் எதிர்க்கிறோம், பலசமயங்களில் அதற்கு நாமே சரணடைந்து விடுகிறோம். ஆனால் உண்மையான தாழ்ச்சி ஒவ்வொரு தோல்வியையும் எதிர்கொள்ளச் செய்கிறது. அத்துடன் விண்ணகத்திலிருந்து கடவுளின் வழிகளை மனிதரீதியாக கற்றுக்கொள்ள அனுப்பப்படும் ஒரு தேவதை என அத்தோல்வியை ஏற்றுக்கொள்ளச் செய்கிறது.

ஞானம்மாவின் மரணத்திற்குப்பிறகு, மற்ற இரண்டு சகோதரிகளும், இளம் வயதிலேயே மிக விரைவாக இறந்து விட்டார்கள். ஒரு நவக்கன்னியர் (சகோதரி ஜோசப் மட்டுமே) தனிமரமாக விடப்பட்டார். அவர் தூயஆவியின் வழிகாட்டுதலாலும், அன்னை ஞானம்மாவின் உள்ளுயிராலும் பலப்படுத்தப்பட்டு, புனித அன்னாள் சபையை திருஅவையின் இதயத்தில் வேர்விட்டு நிலைநிறுத்திய பெருமைக்குரியவர் ஆனார்.

தற்போது 38 மறைமாவட்டங்களில், 600க்கும் மேற்பட்ட சகோதரிகள் மற்றும் 30 நவகன்னியர்களுடன் இச்சபையின் சகோதரிகள் திருச்சபையின் சேவையில் உள்ளனர். இந்தியாவில் பணியாற்றுவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் உலகம் முழுமையும் சென்று பணி புரிய தயார்நிலையில் உள்ளனர். அதனால் தான் அவர்கள் ஏற்கனவே ஆஸ்திரேலியா, ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் பணி புரிந்து வருகின்றனர். எங்கு தேவையோ, அங்கெல்லாம் பணியைப்பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் கனவு. அவர்களின் இலக்கு இதுவே: ‘‘ஒடுக்கப்பட்ட மக்களின் தோழமையில் இறையனுபவம் பெற்று நீதியான உலகை அமைத்தல்’’. இந்த இலக்கோடு, வரவிருக்கும் இறையாட்சியின் சேவையில், திருஅவையின் இதயத்தில், தங்களின் முழுபலத்துடன் வாழ இச்சகோதரிகள் விரும்புகின்றனர்.

‘‘இறைவனில் நிறைவு, எளிமையில் சேவை’’ என்ற தனிவரத்தால் அவர்கள் வழிநடத்தப்படுகின்றனர்.

அன்னை ஞானம்மாவிடம் நமது பிரார்த்தனை

- தாயாகவும், விதவையாகவும் இருந்து நேர்ச்சைப்பாடுகளை ஏற்காமலே துறவியாக வாழ்ந்த அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
- தொலைநோக்குப்பார்வை கொண்ட அன்னையே...
- கொண்ட கொள்கையில் ஆழமான நம்பிக்கைக்கொண்ட அன்னையே…..
- தன்னலமற்ற தாராளமான அன்பிற்கு மாதிரிகையான அன்னையே……
- இறைநம்பிக்கையும், விடாமுயற்சியும் நிறைந்த அன்னையே…..
- ஒடுக்கப்பட்ட பெண்களின் தேவைகளை உணர்ந்த அன்னையே….
- அளவில்லாமல் கொடுக்கவும், தன்னையே முழுமையாக கொடுக்கவும் அறிந்த அன்னையே…..
- மானுடத்தின் சேவையில் தன்னை எளிமையாக உட்படுத்திக்கொண்ட அன்னையே…..

அன்னை ஞானம்மா நமக்கு விட்டுச்சென்ற தனிப்பட்ட மற்றும் சமூக ஆன்மீகம்

- கணக்குப்பார்க்காமல் கொடுக்கும் மனப்பான்மை.
- புதையல் கிடைத்தவுடன் தன்னிடம் இருப்பதை விற்கும் நம்பிக்கைக் கொண்ட பெண்.
- பணிவு, சேவை மற்றும் ஒற்றுமை மனப்பான்மை.
- இறைபராமரிப்பில் அசைக்க முடியாத நம்பிக்கை.
- வார்த்தைப்பாடு ஏற்காத துறவி.
- தைரியமான பெண் மற்றும் மற்றவர்களின் தேவைகளைக் குறிப்பறிந்து உணர்தல்.
- தியாகம், விடாமுயற்சி மற்றும் தாராள மனப்பான்மை.
- மரபுகள் மற்றும் சமூக தப்பறைக்கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர்.
- பெண்களின் கண்ணியம், மரியாதையை வளர்க்க பள்ளியை உருவாக்கிய தொலைநோக்குப்பார்வை கொண்டவர்
- நிபந்தனையற்ற அன்பின் மாதிரி.

2014 ஜனவரி 21 அன்று கத்தோலிக்க திருஅவையால் அன்னை தாட்டிபத்திரி ஞானம்மா “இறைஊழியராக” அறிவிக்கப்பட்டார்.

அருட்தந்தை பெர்னாண்டோ நீக்ரோ மார்க்கோ Sch.Q.